அனுப்புநர் பெறுநர்

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 020377 / எப்1 / 2020 நாள் : 15.09.2020**

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு துணைத்தேர்வுகள், செப்டம்பர் / அக்டோபர் 2020 – தனித்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

-----

செப்டம்பர் / அக்டோபர் 2020 மாதங்களில் நடைபெறவுள்ள மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு துணைத்தேர்வுகளுக்கென அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையங்களின் முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு தேர்வு மையத்தில் தனித்தேர்வர்களுக்கு செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் தொடர்பாக கீழ்க்காணும் அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள் தனித்தேர்வர்களுக்கு செய்முறைத்தேர்வு நடத்தப்படும் தேதி மற்றும் இடம் குறித்த அறிவிப்பினை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். மேலும், இவ்விவரத்தினை அறிவிப்பு பலகையிலும் ஒட்டி வைக்க வேண்டும்.

2. **பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துதல்.**

   ♦ ஏற்கனவே மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில், பழைய நடைமுறையில் செய்முறைத் தேர்வெழுதி 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்களுக்கு மட்டும் தற்போது 30 மதிப்பெண்களுக்கு பழைய பாடத்திட்டத்தில் செய்முறை புறத் தேர்வு நடத்தப்பட வேண்டும்.

   ♦ தனித்தேர்வர்கள் செய்முறைப் பதிவேடு மற்றும் திறன் மதிப்பீட்டிற்கான மதிப்பெண் விவரத்தினை தாங்கள் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று வழங்கினால், அதனடிப்படையில் அவற்றுக்கான (20) மதிப்பெண்களையும், செய்முறை புறத்தேர்வு மதிப்பெண்களையும் சேர்த்து வழங்க வேண்டும் (செய்முறைப் பதிவேடு –15, திறன்மதிப்பீடு –5, செய்முறைப் புறத்தேர்வு–30, மொத்தம் –50 மதிப்பெண்கள்).

- ♦ எழுத்துத் தேர்வில் 30 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாமல், செய்முறைத் தேர்வில் (40 மதிப்பெண்கள் மற்றும் அதற்கு மேலாக) தேர்ச்சி பெற்றவர்கள், மீண்டும் செய்முறைத் தேர்வு செய்யவேண்டியதில்லை. எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அதே போன்று, எழுத்துத் தேர்வில் (30 மதிப்பெண்கள் மற்றும் அதற்கு மேலாக) தேர்ச்சிப் பெற்று செய்முறைத் தேர்வில் 40 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்று தேர்ச்சி பெறாதவர்கள், எழுத்து தேர்வினை மீண்டும் எழுத வேண்டியதில்லை. செய்முறைத் தேர்வு மற்றும் பங்கேற்றால் போதுமானது.

- ♦ மேலும், மார்ச் 2001 மேல்நிலைத் தேர்விற்கு முன்னதாக தேர்வெழுதியவர்கள் தாங்கள் செய்முறைத் தேர்வில் பெற்ற மதிப்பெண் விவரம் குறித்த சான்றினை தாங்கள் படித்த மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்று விண்ணபத்துடன் இணைக்க வேண்டும். இச்சான்றினை படித்த பள்ளியில் பெறமுடியாமற்போனால், கண்டிப்பாக மறுபடியும் செய்முறை தேர்விற்கு வருகைபுரிய வேண்டும்.

3. <u>புதிய நடைமுறையில் (600 மதிப்பெண்கள்) மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடத்துதல்.</u>

- **ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு மட்டும் தற்போது 15 மதிப்பெண்களுக்கு செய்முறை புறத் தேர்வு நடத்தப்பட வேண்டும்.**

- ஏற்கனவே பழைய பாடத்திட்டத்தில் பயின்று செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு பழைய பாடத்திட்டத்திலும், புதிய பாடத்திட்டத்தில் பயின்று செய்முறைத் தேர்வில் பங்கேற்காதவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திலும் செய்முறை புறத் தேர்வு நடத்தப்பட வேண்டும்.

- **தனித்தேர்வர்கள் செய்முறைப் பதிவேடு மற்றும் திறன் மதிப்பீட்டிற்கான மதிப்பெண் விவரத்தினை தாங்கள் பயின்ற பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து பெற்று வழங்கினால், அதனடிப்படையில் அவற்றுக்கான (5) மதிப்பெண்களையும், செய்முறை புறத்தேர்வு மதிப்பெண்களையும் சேர்த்து வழங்க வேண்டும் (செய்முறைப் பதிவேடு –3, திறன் மதிப்பீடு –2 மற்றும் செய்முறை புறத்தேர்வு –15, மதிப்பெண்கள் மொத்தம் –20 மதிப்பெண்கள்).**

- அரசாணை எண் (2டி) 50, பள்ளிக்கல்வித் (ஜிஇ1)துறை, நாள்.09.08.2017–ன்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சிப் பெறுவதற்கு எழுத்துத் தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு குறைந்தபட்சம் 15 மதிப்பெண்கள் பெற்று செய்முறைத் தேர்வில் கட்டாயம் பங்கேற்றிருக்க வேண்டும். மேலும், எழுத்துத்தேர்வு, அகமதிப்பீடு மற்றும் செய்முறை தேர்வு ஆகியவற்றில் ஒட்டு மொத்தமாக 100–க்கு குறைந்த பட்சம் 35 மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும். செய்முறைத்தேர்வில் பங்கேற்காமல், தேர்ச்சிக்கான குறைந்த பட்ச மதிப்பெண்(35) பெற்றிருந்தாலும், அத்தேர்வர்கள் தேர்ச்சி பெறாதவர்களே ஆவர்.

- ஏற்கனவே எழுத்துத் தேர்வெழுதி, எழுத்து தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று, செய்முறைத் தேர்வில் பங்கேற்காத காரணத்தால் தேர்ச்சி பெறாதவர்கள், தற்போது செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்க வேண்டும். அவ்வகை தேர்வர்கள் மீண்டும் எழுத்துத் தேர்வினை எழுத வேண்டாம்.

- ஏற்கனவே செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல், எழுத்து தேர்வு மற்றும் அகமதிப்பீடு ஆகிய இரண்டிலும் சேர்த்து 35 மதிப்பெண்ணுக்கும் குறைவாக பெற்று தேர்ச்சி பெறாதவர்கள் தற்போது எழுத்து தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டையும் கட்டாயம் எழுதவேண்டும்.

மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தனித்தேர்வர்களின், மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான மதிப்பெண் பட்டியல் படிவங்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றன. **மேல்நிலை இரண்டாம் ஆண்டு செய்முறைத் தேர்வு தொடர்பான படிவங்களைப் பூர்த்தி செய்து 29.09.2020-க்குள்ளும் / மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு தொடர்பான படிவங்களைப் பூர்த்தி செய்து 08.10.2020-க்குள்ளும்** திருமதி.கு.ஜெயஸ்ரீ, துணை இயக்குநர் (மேல்நிலை), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**<u>இணைப்பு</u> :** வெற்று மதிப்பெண் பட்டியல் – படிவங்கள்

ஒம்./–
இயக்குநர்

<u>நகல்</u>

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்,
3. கண்காணிப்பாளர்கள், எப் 1, எப் 4, எச்.4 பிரிவுகள் (அலுவலகம்)

## HSE FIRST YEAR / SECOND YEAR SUPPLEMENTARY EXAMINATION SEP 2020
## PRACTICAL MARK SHEET (NEW PATTERN)

## (Who have not already appeared for Practical Exam)

| SL NO | PERMANENT REGISTER NUMBER | ROLL NUMBER | NAME | SUBJECT CODE | PRACTICAL | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | SUBJECT NAME | MARK | | | REMARKS |
| | | | | | | EXTERNAL | INTERNAL | TOTAL | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

**Signature of the Chief Superintendent**
**Centre Seal.**

## HSE SECOND YEAR SUPPLEMENTARY EXAMINATION SEP 2020
## PRACTICAL MARK SHEET (OLD PATTERN)

| SL NO | PERMANENT REGISTER NUMBER | ROLL NUMBER | NAME | SUBJECT CODE | PRACTICAL | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | SUBJECT NAME | MARK | | | REMARKS |
| | | | | | | EXTERNAL | INTERNAL | TOTAL | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

**Signature of the Chief Superintendent**
**Centre Seal**